# திருமண அனுமதிக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள்

## இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்:

1. விண்ணப்பம்
2. விண்ணப்பதாரரின் ஆதார் நகல்
3. மணமகன் மற்றும் மணமகள் ஆதார் நகல்
4. திருமண அழைப்பிதழ்
5. உறுதிமொழிப் படிவம் (வீட்டார்/கோவில் பொறுப்பாளர்/பாதிரியார்/ஜமாத் தலைவர்)

## நிபந்தனைகள்:

1. திருமண நிகழ்ச்சியில் அதிகபட்சமாக 50 நபர்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும்.
2. 65 வயதுக்கு மேற்பட்டவர்களும், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் வெளி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.
3. திருமண நிகழ்ச்சியினை 45 நிமிடங்களுக்குள் நடத்தி முடிக்கவேண்டும்.
4. திருமணத்தில் கலந்துகொள்வோர் சமூக இடைவெளியை (Social Distance) கடைபிடிக்க வேண்டும்.
5. திருமணத்தில் கலந்துகொள்வோருக்குத் தேவையான முகக்கவசம், கையுறைகள் மற்றும் கிருமிநாசினி திரவம் போதிய அளவில் இருப்பு வைத்து குறிப்பிட்ட கால இடைவெளியில் அவைகளை பயன்படுத்த வேண்டும்.
6. திருமண நிகழ்ச்சிக்கு வழங்கப்படும் இந்த அனுமதிச்சீட்டை திருமணச் சான்று பெற ஆவணமாகப் பயன்படுத்தக்கூடாது.
7. திருமணப் பதிவானது நடைமுறையில் உள்ள விதிமுறைகளைக் கடைப்பிடித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

---

விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**marriagepasskkm@gmail.com**

# உறுதிமொழிப்படிவம்

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் முன்பாக அளிக்கும் உறுதிமொழி

________________________ ஆகிய நான் எனது மகன்/மகள் ________________________ திருமணம் எனது வீட்டில் நடைபெற உள்ளதை முன்னிட்டு அளிக்கும் உறுதிமொழி:

1. தாங்கள் அளிக்கும் திருமண அனுமதிச் சீட்டை சட்டத்திற்குப் புறம்பான வழியில் வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்த மாட்டேன்.
2. திருமண நிகழ்ச்சியில் அரசு அனுமதித்துள்ள அளவின்படி 50 நபர்களுக்கு மிகாத அளவில் கூடுவதை உறுதிப்படுத்திக்கொள்வேன்.
3. அரசு வகுத்துள்ள சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

மேற்படி உறுதிமொழிகளை மீறினால் என் மீது காவல் நிலையம் மூலமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அரசு குற்றவியல் நடவடிக்கை தொடரலாம் எனவும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

------------------------------------------------